1975 மார்ச் 18]

திருநெல்வேலியில் கண்டியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கருத்து கேட்கப்பட்டபோது அவர்கள் முடியாது என்று எழுதி அனுப்பிவிட்டார்கள். மீண்டும் இதை மாநகராட்சி ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை இருப்பதால் மேலப்பாளையம் நகராட்சி அதற்கு ஒப்புக்கொண்டால் பரிசீலிக்கலாம் என்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. வி. ஆலடி அருணா : தலைவரவர்களே, இந்த மூன்று நகர மன்றங்களையும் இணைத்து மாநகராட்சியாக ஆக்குவதற்கு இதுவரை சம்பந்தப்பட்ட நகர மன்றங்களில் எந்தெந்த நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கின்றன? அனுப்பி இருந்தால் எப்போது அனுப்பி வைக்கப்பட்டது? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாநகராட்சியாக்குவதற்கு பாளையங்கோட்டை நகராட்சி மட்டும் தீர்மானம் போட்டிருக்கிறது. மேலப்பாளையம் இன்னும் தீர்மானம் எதுவும் அனுப்பவில்லை. அதனால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

*358 வினா—திரு. வி. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974–75 கல்வி ஆண்டில் புதிதாக உயர்நிலைப்பள்ளிகள் திறக்க வேண்டி, பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றுள் அரசு அனுமதித்தவை எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 105.

(இ) 57.

திரு. வி. ஆலடி அருணா : தலைவரவர்களே, புதிதாக உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு வந்த விண்ணப்பங்களில் 50-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு என்ன காரணம்? ஒரு குறிப்பிட்ட தகுதியுள்ள கிராமத்திற்கு, இவ்வளவு எண்ணிக்கை கொண்ட மக்கள் தொகை இருக்கிற கிராமத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி தொடங்க வேண்டுமென்று திட்டம் வகுத்து, நாடெங்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 40 உயர்நிலைப் பள்ளிகள் துவக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தோம். அதன்படி ஆங்காங்கேயிருந்து வருகின்ற மனுக்களை பரிசீலித்து 57 பள்ளிகளுக்கு இடம் அளித்தோம். பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. 5 ஏக்கர் நிலப்பரப்பு இடம்—புறம்போக்கு இடமோ அல்லது தனியார் கொடுக்க முன்வந்தால் அந்த இடமோ—தேவை. ரூ. 10 ஆயிரம் கல்வி நிதி என்று முன்பணமும், ரூ. 12,500 முன் பணமும் கொடுக்க முன்வரவேண்டும். பக்கத்தில் 5 மைல் சுற்றளவுக்கு

உயர்நிலைப் பள்ளிகள் இருக்கக் கூடாது. ஏனென்றால் அப்போது அந்தப் பள்ளிகளின் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும். ஆசிரியர்களின் எண்ணிக்கையை மாற்றாமல் இருக்க வேண்டிய அவசியம் அப்போதுதான் ஏற்படும். இப்படிப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக முன்வந்த 57 பள்ளிகளுக்கு தரப்பட்டிருக்கிறது. அதேபோல 2½ மைலுக்கு ஒரு உயர் துவக்கப்பள்ளி அமைக்கிற கொள்கை அடிப்படையில் ஆங்காங்கே உயர் துவக்கப்பள்ளிகள் அமைக்கப் பட்டு வருகின்றன. உயர் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை அமைக்கும்போது மேற்கண்ட விதிகளைக் கையாண்டு நிறைவேற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி துவங்க வேண்டுமென்றால் ரூ. 25 ஆயிரம் கட்டவேண்டும் என்று அரசு நிபந்தனை விதித்திருக்கிறது. பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிற இடங்களில் இந்த நிபந்தனை மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. ஏழை மக்களால் கொடுக்க முடியாது. எனவே, விதியைத் தளர்த்தி, ரூ. 10 ஆயிரம் கட்டினால் போதும் என்று அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மிகச் மிகச் சாதாரண ஊர்களில் கூட, அந்தப் பக்கத்து ஊராட்சி ஒன்றியம் மற்றும் எல்லோரும் சேர்ந்து கட்டி பள்ளியைத் துவக்கியிருக்கிறார்கள். அவர்கள் 25 ஆயிரம் கட்டினாலும் கூட, பள்ளிக் கட்டிடத்திற்கு ரூ. 2 லட்சம், ஆசிரியர்களின் சம்பளம் ரூ. 1 லட்சம் என்று இப்படி அரசுக்கும் செலவு இருக்கிறது. ரூ. 25 ஆயிரம் கட்ட வேண்டும் என்பது, அந்த மக்களுக்கு ஆர்வம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்; ரூ. 25 ஆயிரம் கட்டுகிறார்கள் என்றால் ஆர்வத்தோடு எடுக்கின்ற முயற்சி அவர்களிடம் இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, ஐந்து மைல் சுற்றளவுக்கு வேறு பள்ளிகள் இருக்கக் கூடாது என்ற புதிய விதியினைப் புகுத்தி இருக்கிறார்கள். இதனால் பல இடங்களில் பள்ளிகள் ஆரம்பமாக இடைஞ்சலாக இருக்கிறது. எம்.ஜி.ஆர்.-ல் இந்த விதியைப் புகுத்தியது நியாயம்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஐந்து மைல் சுற்று வட்டாரத்திற்குள் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்படுமானால் பக்கத்திலுள்ள மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை பாதிக்கப்படலாம். மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்டால் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. அதனால் அந்தப் பள்ளியிலிருந்து இந்தப் பள்ளிக்கு மாற்ற வேண்டிய அவசியம் போன்றவை எல்லாம் ஏற்படலாம். இந்தக் காரணங்களுக்காகத்தான் அந்த விதி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையிலேயும் மற்ற மாநகரங்களிலும் ஒரு பள்ளி துவங்க வேண்டுமானால் ஐந்து மைல் சுற்று வட்டாரம் என்ற விதியைக் கணக்கில் வைத்துப் பார்க்க முடியாது. 3 பர்லாங் தூரத்தில் கூட பள்ளிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில்

1975 மார்ச் 18]

விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற இடங்களில், 5 மைலுக்குள் இருந்தால் அந்தப் பள்ளி பாதிக்கப்படும் என்ற காரணத்தால் இந்த விதி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Is the Hon. Minister aware of the fact that there is a lot of difficulty for students to get admission into high schools especially in urban areas like Madras City. The Hon. Minister has mentioned about the difficulties with regard to starting of new schools. So, will he consider whether it is not possible to give facilities for such of those schools which want to expand their institutions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இட வசதியோடு வகுப்புகளை நடத்த விண்ணப்பித்தால் அனுமதி அளிக்கப்படுகிறது. இட வசதி இல்லை என்ற காரணத்தால், ஆங்காங்கே வகுப்புகளை ஷிப்ட் சிஸ்டத்தில் வைக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். சென்னையில் சில பள்ளிகள் காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் நடக்கின்றன. இருக்கின்ற இட வசதியை வைத்துக் கொண்டு அதிகப்படியான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, வெங்கடாசலம் பள்ளியை ஹைஸ்கூலாக ஆக்க வேண்டுமென்று ஐந்தாண்டுகளுக்கு முன்பு கொடுத்த மனு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன். இந்த ஆண்டு—1974–75-ல் 52 புதுப்பள்ளிகளைத் திறப்பது என்று சொன்னார்கள். அந்தப் பள்ளியைப் பற்றின விவரம் காணப்படவில்லை. அந்த மனு என்ன ஆயிற்று, என்ன தாமதம், எந்த விதமான பதிலும் இல்லை. காரணம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் தருகிறேன். அல்லது அம்மையார் கேட்பார்களேயானால் விவரத்தை அறிந்து சொல்கிறேன்.

*359 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, ஐந்து மைல் சுற்று வட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்று விதிமுறைகள் இருக்கின்றன என்று கூறினார்கள். பழையனூர் சுற்று வட்டாரத்தில் ஐந்து மைல்களுக்கு என்ன, 7 மைல்களுக்குள் கூட ஒரு பள்ளி இல்லாத காரணத்தால் அங்கே ஆரம்பப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் உயர் நிலைப்